உ

# ஞானக் கனிகள்



உ

# ஞானக் கனிகள்

தொகுப்பும் உரையும்

டாக்டர் கவிச்செம்மல்

**ரெ.முத்துக்கணேசனார்**

ஒளியகம் ; காரைக்குடி

வழங்கும் நாள்

விகுருதி - வைகாசி - 12

26.05.2010

**திருமண வெளியீடு**

இலக்கியக் கழகம்

காரைக்குடி.

உ

## இராம.பழனியப்பன் - விசாலாட்சி

### திருமண வாழ்த்து

அம்பொன் விசாலாட்சி
        ஆளும் பழனியப்ப!
செம்பதுமப் பூப்போல்
        சிறந்திடுவீர் - அம்புவியில்
சிற்றம் பலத்தான்
        திருவருளால் வாழியவே
கற்கும் குறளாய்க்
        கலந்து!

உ

திருச்சிற்றம்பலம்

# நமச்சிவாய மந்திரம்

**காத லாகிக்**
**கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை**
**நன்னெறிக் குய்ப்பது ;**
**வேத நான்கினும்**
**மெய்ப் பொருள் ஆவது ;**
**நாதன் நாமம்**
**நமச்சி வாயவே!**

– திருஞான சம்பந்தர்
தேவாரம் : மூன்றாம் திருமுறை
நமச்சிவாயத் திருப்பதிகம்.

வேதங்கள் நான்கு வகைப்படும் என்பர் ; அந்த நான்குவகை வேதங்கள் உள்ளும் உண்மைப் பொருளாக வீற்றிருப்பது சிவபெருமானின் திருநாமமாகிய நமச்சிவாயத் திருமந்திரம். நமச்சிவாய மந்திரம் என்பது திரு ஐந்தெழுத்து மந்திரமாகும்.

ஆன்மீக உலகில் ஆண்டவன் காதலன் என்றும், ஆன்மாக்கள் காதலிகள் என்றும் கூறுவார்கள். அழகுமிக்க காதலர்கள் ஒருவருக்கொருவர் உள்ளன்போடு எவ்வாறு ஒன்றி இருப்பார்களோ, அவ்வாறே நாமும் இறைவனோடு காதலாகி, ஒன்றவேண்டும். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்றார் வள்ளுவர். அவ்வகையில் உயிருக்கு உயிராக விளங்கும் இறைவன்பால் பேரன்புகொண்டு, அவனையே நினைந்து கசிந்துருக வேண்டும். உணர்வைப் பெருக்கிக் கண்களில் நீரைப்பெருக்க வேண்டும். அவன் திருநாமமாகிய

நமச்சிவாயத்தை நாளெல்லாம், அல்லும் பகலும் மறவாது ஓத வேண்டும். புறத்தே கதிரவன் இருக்கின்றான். அவன் கதிர்கள் நம் மேனியில் படுகின்றன; கதிர்கள் உடம்புக்குள் சென்று நன்மைகளை விளைவிக்கின்றன. அதுபோல் நமச்சிவாய மந்திர ஒலி நமக்குள் சென்று, நன்மைகள் பலவற்றைத் தோற்றுவிக்கின்றது. வினைகளால், வாழ்வில் இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றோம். ஆனால் இம்மந்திரம் வினைகளை விலக்கும். நன்மை பயக்கும் ; நல்வழியில் நம்மைச் செலுத்தும். முத்திக்குரிய பேரின்பத்தைத் தந்து, இறைவன் திருவடியில் சேர்க்கும் எனலாம்.

இப்பதிகத்தை ‘காதல் மெய்ப்பதிகம்’ என்றும் உரைப்பார்கள்.

நமச்சிவாய வாழ்க!<br>
நாதன்தாள் வாழ்க!<br>
என்பது மணிவாசகம்

உ

# நமச்சிவாயத் திருவிளக்கு

**இல்லக விளக்கது இருள்கெ டுப்பது**
**சொல்லக விளக்கது சோதி உள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே!**

– திருநாவுக்கரசர்
தேவாரம்,
நமச்சிவாயத் திருப்பதிகம்.

விளக்குதல் என்பது தெரியாத ஒரு பொருளைத் தெளிவிப்பதாகும்.

இல்லங்களில் சுடர்விட்டு எரியும் பலவகை வடிவ விளக்குகள் உண்டு; எரியும் சுடர்கள் இருள் அகற்றிப் பொருள்களைக் காட்டும்.

வானகத்தே தோன்றும் பெரிய விளக்கு கதிரவன் ; தன் கதிர்களைப் பரப்புகின்றான் ; இரவில் சந்திரன் தன் கதிர்களைப் பரப்புகின்றான். இந்தக் கதிர்கள் நம் மேனியில் படுகின்றது. உட்புகுந்து பல்வேறு நன்மைகளைச் செய்கின்றது. அதுபோல மந்திரச்சொற்கள், பன்முறை மந்திரச் சொற்களை ஓதுபவர்களுடைய அகத்துள்ளே ஊடுருவுகின்றது. அங்கு நிலை கொண்டு பலபல நன்மைகளை உருவாக்குகின்றது.

இவ்வாறே பல்வகை வடிவில் அமைந்த சுடர் விளக்குத்தரும் சுடர்களின் சக்திகளும் நினைவார் அகத்தே அமர்ந்து அறிவையும், மனத்தையும் புறத்தே செல்லவிடாது அகத்தினுள்ளே சிவதரிசனத்தை காட்டி ஒளிவிடுகின்றது.

ஆகவே ஞானத்தை நமக்குப் புகட்டும் நமச்சிவாய மந்திரத்தை நல்லகத் திருவிளக்கு எனக் கூறுவர் திருநாவுக்கரசர்.

உ

திருச்சிற்றம்பலம்

# நமச்சிவாய நம்பன்

(திருப்பாண்டிக் கொடுமுடி)

**செம்பொன்நேர் சடையாய் திரிபுரம்**
**தீயெழச் சிலை கோலினாய்**
**வம்புலாங் குழலா ளைப் பாகம்**
**அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்**
**கொம்பின்மேற் குயில்கூவ மாமயில்**
**ஆடு பாண்டிக் கொடுமுடி**
**நம்பனே! உனைநான் மறக்கினும்**
**சொல்லு நாநமச் சிவாயவே!**

– சுந்தரர் ; தேவாரம்
திருப்பாண்டிக்கொடுமுடி.

சுந்தரர் பாடிய நமச்சிவாயத் திருப்பதிகம். சுந்தரர் பாண்டிக்கொடுமுடித் தலம் சென்றார். அங்கு அவ்விறை வனைப்பாடும் பொழுதே நமச்சிவாயத் திருப்பதிகமாகச் சேர்த்துப் பாடியுள்ளார். இப்பாடலில் திருநாமச் சிறப்பினையும், அதன் பயனையும் அழுத்தமாகத் தருகிறார் சுந்தரர்.

மாங்கொம்பில் அமர்ந்து குயில்கள் கூவுகின்றன ; அவ்வொலிக்கேற்ப மயில்கள் ஆடல்புரிகின்றன. இவ்வாறு இயற்கை வளம் கொண்ட திருப்பாண்டிக்கொடுமுடி நகரில் வீற்றிருந்து அருள் வழங்கும் சிவபெருமானே! நம்பனே!

பொன்மயமாக விளங்குகின்றது உன் சடைத்திருமுடிகள் ; முப்புரங்களையும், சினந்து, முக்கண்களால் நோக்கி எரித்தாய். உமையம்மை மணம் வீசும் கூந்தலையுடையவள். வீரம்செறிந்த நீ, கருணகாட்டி, உமையம்மைக்கு உன்உடலில் பாதி அளித்து மகிழ்ந்தாய் ; கருணையாளனாகிய உன் திருநாமத்தை அல்லும் பகலும் கூறிப் போற்றிப் பயின்று வருகின்றேன். ஒருவேளை நான் கூற மறந்தாலும் பயின்று பழகிய காரணத்தால் என்னுடைய நாவானது தானே சொல்லும் எனப் போற்றுகின்றார்.

உ

# திருநீறு

(திருஆலவாய்)

**மந்திர மாவது நீறு**
**வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு**
**துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு**
**சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாய்உமை பங்கன்**
**திருஆல வாயான்திரு நீறே!**

– திருஞான சம்பந்தர்
திருநீற்றுத் திருப்பதிகம்
தேவாரம் : திரு ஆலவாய்

சிவந்த திருவாயினை உடையவள் உமையம்மை, உமை அம்மைக்குத் தன் உடலில் பாதியை அளித்து மகிழ்ந்தார், சிவபெருமான் ; அவர் திரு ஆலவாயில் அமர்ந்து ஆட்சிபுரிகின்றார் ; அவர்தம் திருமேனியில் ஒளிர்வது இத்திருநீறே ஆகும்.

மந்திரம் என்று சொல்வது, யார் ஒருவர் தன்னை உபாசிக்கின்றார்களோ, அவர்களுக்குக் கவசமாக இருந்து காக்கும் ; அதுபோல் சிவசிந்தனையோடு திருநீற்றைப் பூசுபவர்களை, மந்திரம்போன்று காப்பாற்றும். மேலான தேவர்களும், தெய்வஅருள்பெற்ற அடியார்களும் தங்களுக்குப் பாதுகாப்பாகவே திருநீற்றைத் தன்னோடு வைத்துக்கொள்வர். திருநீறு திருமேனியில் பூசப்படுவதால், ஒருவகை அழகைத் தருகிறது. நோய் முதலியவற்றைப் போக்குகின்றது; பயம் அறவே அகலுகிறது. சைவ ஆகமமாகவும், தத்துவ சாத்திரமாகவும் விளங்குவது திருநீறே! சைவசமயத்தின் உண்மைப் பொருளாக இலங்குவதும் திருநீறாகும் ; திருநீறே சிவமாகும்!

உ

# தென்னன் திருப்பெருந்துறையான்

**கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை**
**வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்**
**கல்லைப் பிசைந்து கனியாக்கித் தண்கருணை**
**வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்**
**தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமென்னும்**
**ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்!**

– மாணிக்கவாசகர்
திருவாசகம்
திருஅம்மானை

இப்பாடல் மாணிக்கவாசகரால் பாடப்பெற்றது ; அவர் பாடிய திருவாசகத் தொகுப்பில் திரு அம்மானைப் பாடலாக இருபது பாடல்கள் பாடியுள்ளார்.

அம்மானை என்பது மகளிர்விளையாட்டுக்களில் ஒன்றாகும். மூவர்கூடி அமர்ந்து, கேள்விகள் எழுப்பி, அதற்கு மற்றவர் விடை பகர்ந்து ஆடுதல் என்பது வழிமுறையாகும்.

நான் கல்வி அறிவு இல்லாதவன் ; ஞான நூல்களைக் கற்றறியாதவன் ; பண்பாடற்றவன் ; விலங்காகிய நாயினும் கடைப்பட்டவன் ; என் மனமோ மென்மையானதல்ல ; கடினமானது ; இவ்வாறிருந்தும், தென்னன் திருப்பெருந்துறைவனாகிய சிவபெருமான் என்னைத் தன்

பெருங்கருணையினால் ஆட்கொண்டான் அவன் பேரன்பால் மயங்கி அவன்மேல் பித்தாகிவிட்டேன். அவன் என்னைத்தொட்டு என் கல்மனத்தைப் பிசைந்து பிசைந்து 'கனி' யாக்கிவிட்டான் இது ஒருவகையில் விசித்திரமாக இருக்கிறதல்லவா! உண்மையில் அவன் பேர்பெற்ற வல்லாளன் தான்!

இப்பகுதியில் சித்தாந்தக் கருத்தினைச் சொல்வார்கள். கல் என்பதற்கு, எல்லாவகை வினைகளும், மும்மலங்களும் நிறைந்தது என்பர் ; இறைவன் தன் அருட்பார்வை ஒன்றாலே அத்துணை வினைகளையும் களைந்து, என்னை அவன் ஏற்றுக்கொள்ளும் அளவிற்குப் பக்குவப்படுத்திவிட்டான். அவ்வாறு பக்குவப்படுத்தியதைத்தான் 'கனி' என்பர்.

இவ்வாறு, கருணைப் பெருவெள்ளத்தில் மூழ்கவைத்து என்னை உருமாற்றிவிட்ட அவன் என் வினைகடிந்த வேதியன் ; அவன்தில்லைச் சிற்றம்பலத்தே ஆடும் அழகன். விரைந்து செல்லும் காளை வாகனத்தை ஊர்தியாகக் கொண்டவன். ஆகவே அவ்விறைவன் புகழ்பாடி நாம் ஆடுவோமாக!

உ

# திருப்பல்லாண்டு

(சேந்தனார்)

**சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த**
**தூய்மனத் தொண்டர் உள்ளீர்**
**சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்**
**சிறுநெறி சேராமே**
**வில்லாண்ட கனகத் திரள்மேரு**
**விடங்கன் விடைப்பாகன்**
**பல்லாண் டென்னும் பதம்கடந் தானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே!**

– சேந்தனார்
திருப்பல்லாண்டு திருப்பதிகம்
ஒன்பதாம் திருமுறை

தில்லையில் சேந்தனார் பாடிய பாடல் இத்திருப்பல்லாண்டாகும். இப்பல்லாண்டில் 13 பாடல்கள் உள்ளன.

ஒருமுறை தில்லைச் சிற்றம்பலவன் தேர், இடையில் நின்றுவிட்டது. அத்தேரைச் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி நிலைபெறச் செய்தார். இறைவன் அவர் பெருமையை வெளிப்படுத்த, அவ்வாறு செய்தான் எனக் கூறுவர்.

நாம், நன்றாக வாழ்வதற்கு, இறைவனைத் துதித்து, அவனுக்குப் பல்லாண்டுபாடி அவனை வாழ்க என்று வாழ்த்துச் சொல்வது மரபு எனச் சான்றோர் கூறுவர். அவ்வழி, சேந்தனார் இவ்வுலக உயிர்கள் நன்மைபெற்று வாழ்வதற்கே இறைவனுக்குப் பல்லாண்டு பாடுகின்றார்.

வேதங்கள் நால்வகைப்படும் ; வேதங்கள் சொற்களை பல்வகைப பொருள்களில் ஆளும் இயல்புடையன ; அழியாத உண்மைப் பொருளைக் கொண்ட வேதங்களைக் கற்ற தூயமனமுடைய தொண்டர்களே! இந்த உலகத்தில் தெய்வம் ஒன்றுதாள் பல தெய்வங்கள் இல்லை ; மற்றவை தெய்வ வடிவங்கள்தான். ஊரெல்லாம் தெய்வம், ஊருணிக்கரையெல்லாம் தெய்வம் என்று அலையாதீர்கள். உலகுக்கு தெய்வம் ஒருவனே! சைவசமயத்திற்குத் தெய்வம் சிவனே! அவன்தான் உலகுக்கும் தெய்வம்! பெயரும், மதமும் வெவ்வேறாகக் கொண்டவன். ஆகவே பலதெய்வம் என்று நம்பி, சிறுசிறு தேவர்களைக் கொண்டாடி சிறு நெறிகளைச் சேராதீர்! சிவநெறியைச் சேருங்கள் பொன்மலையாக மேருமலையை வில்லாகக் கொண்டவன் சிவபெருமான். அவன் பேரழகன். காளையை வாகனமாகக் கொண்டவன். உயிர்களுக்கு ஞானத்தை வழங்குபவன் ; அவன் பலபல ஆண்டுகளைக் கடந்து நிற்பவன் ; எல்லையற்றவன். நிலையானவன், நமக்காக அச்சிவபெருமான் பல்லாண்டு வாழநாம் வழிபட்டு வாழ்த்துவோமாக!

“தெய்வம் பலபல சொல்லி – பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்” – என்பது
பாரதியார் வாக்கு!

உ

# அம்மைத் திருப்பல்லாண்டு

நறுந்தளிரே! மருக்கொழுந்தே! மரகதமே!
நாட்காலை பசுமை பூப்பாய்!
குறுந்தளிராம் கொடிவீட்டில் பிச்சியெனும்
குறும்பூவாய் இன்பம் ஈவாய்
சிறந்தொளிசேர் செம்பூவும் பசுந்தழையும்
சேர்ந்தன போல் சிவமும் நீயும்
அறந்தழைக்க நேர்பாதி கலந்தகோல
அழகினுக்காக யிரம்பல் லாண்டு!

- ரெ.முத்துக்கணேசன்
'முத்துமாலை' கவிதைகள்

"பல்லாண்டு இசைகூறும் பக்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடி கண்டுகொண்டேன் திருவாரூர் அம்மானே" என்பர் திருநாவுக்கரசர் பெருமான். அவ்வழியில் கவிஞரும் பல்லாண்டுபாடி உமையொரு பங்கன் (அர்த்தநாரீசுவரர்) திருக்கோலத்தை இப்பாடலில் கண்டுகளிக்கின்றார்.

எல்லாவகைப் பண்புகளுக்கும் 'அழகு' என்ற பண்பு மூலப்பொருளாய் இருக்கின்றது. எவ்வாறு எல்லாம் வல்ல இறைவன் எல்லாவகைப் பொருள்களிலும் கலந்து தோற்றமாய் இருக்கின்றானோ அவ்வாறே 'அழகும்' எல்லாப் பொருள்களிலும் கலந்து காட்சி நல்கி, மூலத்தத்துவமாய் இலங்கக் காணுகின்றோம்.

இதனை,

"எங்கெங்கே அழகு தோன்றுகின்றதோ
அங்கங்கே மூலதத்துவம் தோன்றுகின்றது
அவ்வழகைத் தியானித்தால், அந்த மூல
தத்துவத்தைத் தியானிப்பவர் அடையமுடியும்"

- பேரறிஞர் பிளேட்டோ

நறுமணம் கொண்ட தளிர்போன்ற தாயே! ஆற்றல் நிறைந்த மருக்கொழுந்து போன்றவளே! மணிகளுள் சிறந்த மரகதம் போன்றவளே! கொடிப்பூ என்று சொல்லக்கூடிய சிறிய தளிரில், கொடியில் பூத்து மணக்கும் பிச்சிப் பூப்போன்ற அம்மையே! இத்தனை இயற்கை வடிவில் அழகினைப் பெய்து, உலக உயிர்களுக்குப் பேரின்பங்களை ஈந்து உவப்பவளே! தாயே! உனக்குப் பல்லாண்டுபாடி வணங்குகின்றோம்.

ஆனால் நீயோ பேரொளி பொருந்திய சிவந்தபூக்களின் நிறம் அமைந்த சிவபெருமானோடு, பசுந்தழையின் நிறமாகிய பச்சை நிறம் அமைந்த நீயும் சேர்ந்து காட்சியளிக்கின்றாய். சிவந்தபூவும் பசுந்தழையும் சேர்ந்த காட்சி எத்தனை அழகு. ஒருபால் சிவனும், ஒருபால் சக்தியும் கலந்த வடிவை அர்த்தநாரீசுவர வடிவம் என்று உரைப்பார்கள். இந்தவடிவு அழகின் உச்சநிலையில் உள்ளவடிவம். உலகில், எங்குமே காணமுடியாத வடிவம். இப்பேரழகு வடிவை ஏன் எடுத்தாய் என்று சிந்தித்துப் பார்த்தால், இவ்வுலகமானது அறத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கவேண்டும், அறமும் அழகும் அதன் உயிர்ப்பாய் இலங்கவேண்டுமென்பதுதானே உன் கருத்து!

“காணக்கண் கோடி வேண்டும் காண்பதற்கு” என்று சொல்வார்கள். அத்தகைய பேரழகிற்குப் பல்லாண்டு பாடிப் பரவுகின்றோம்!

உ

# கலைமகள் வாழ்த்து

கலையும்நீ கற்பார் மனத்துவளர்
கல்விக்கோர் வித்தும் நீ
நிலையம் நீ பண்களும் நீயே
அழகைச் சிறைப் பிடித்த
சிலைகள்நீ சீருணர்வு தந்த
கவிதைப் பனுவல்நீ
கலைமகள் தாயே!உன் தாமரைப்
பாதங்கள் போற்றுவோமே!

– ரெ.முத்துக்கணேசன்
'முத்துமாலை'

கலைமகள் வெண்தாமரையில் வீற்றிருப்பவள். எல்லாவகை அறிவுகளும், அவள் அருளால் பூப்பவை ; எல்லாவகைக் கலைகளும் அவளால் பிறப்பதால் "கலைமகள்" எனப் பெயர் பெற்றவள் ; எல்லா மக்களுடைய நாவில் வீற்றிருந்து அருள்புரிவதால் "நாமகள்" எனப் பெயர்பெற்றவள்.

அறுபத்து நான்கு கலைகளும் கலைமகளிடமிருந்து பிறந்தவை. அக்கலைகள் பல்வேறுபட்ட வகைகளாக இருந்தாலும், நுட்பமாக வளர்க்கும் தாயவள். அறிவுபலதுறைகளை துக்கொண்ட. துறைகள், பலவாயினும் அவ்வத்துறைகளைப் பயில்வோர் பலர் ஆவர். கற்றுத்தேர்பவர் மனத்துள் அறிவு வளர்ச்சிக்கு வித்தாகி அவ்வாறு இருப்பவள்.

பல்வேறு தொழில்கள், தொழில் நிலைகள் காலத்திற்கு ஏற்றவண்ணம் தோன்றுகின்றன. அத் தொழில் வளத்தின் உயிர் நிலையமாயிருப்பவள் கலைமகள். இசைக்கலை பெரும் கடலாகும். அக்கடலில் தோன்றும் பண்களின் அடிப்படையே கலைமகளால்தான். கவிதைகள் காலத்தை வென்று நிற்கும்! இலக்கியத்தின் உயிர்நாடி கவிதைகள். அக்கவிதைப் பாக்களாக, அதன் தொகுதிகளாக இருப்பவள்! தாயே! உன்தாமரைப் பாதங்களைப் போற்றிப் பரவுகின்றோம்.

உ

# திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு!
அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ் கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை
யும்சுட ராழியும் பல்லாண்டு
படையோர் புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே!

– பெரியாழ்வார்
பெரியாழ்வார் திருமொழி
நாலாயிர திவ்ய பிரபந்தம்.

பெரியாழ்வார் முதன்முதலில் பாடிய பாடல் இத்திருப்பல்லாண்டாகும். இப்பல்லாண்டில் 12 பாசுரங்கள் உள்ளன.

உலகில் முதியவர்களை வணங்கி இளைஞர்கள் வாழ்த்துப் பெறுதல் உயரிய மரபாகும். ஆனால், இங்கு ஆழ்வார் இறைவனை வாழ்த்துகின்றார். ஆழ்வார், பெருமாளின் பேரழகால் ஈர்க்கப்பட்டு அப்பெருமாளுக்குக் கண்ணெச்சல்

படும் என்று எண்ணி, அவருக்கு எந்தக் குறையும் வரக்கூடாதே எனத் தாயன்பில் பெருமாளுக்குப் பல்லாண்டு பாடுகின்றார். இதனை மங்களாசாசனம் எனக் கூறுவது வைணவ மரபு.

ஆழ்வார் பெருமாளுக்கு மட்டும் பல்லாண்டு பாடி மகிழவில்லை ; எல்லா வகைச் செல்வங்களும் ஒரு உருவமாகித் திருமால் மார்பில் திகழும் திருமகளுக்கும் பல்லாண்டு பாடிக் களிக்கின்றார். வெற்றிக்குரிய சக்கரம், சங்குமுதலியவற்றிற்கும். பல்லாண்டு பாடிப் போற்றுகின்றார்.

திருமால், மல்லர்களை வெற்றிகொண்ட தோள்களை உடையவர் ; ஒளிவீசும் திருமேனியை உடையவர் ; மரகதநிறத்தை உடைய மாமணி வண்ணத்தர். அவருடைய சிவந்த செவ்விய திருவடிகளைப் பல்கால் பணிந்து போற்றுவோமாக! பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம் ஆண்டுகள் அவன் இவ்வுலக மக்களுக்கு அருள்புரிய வாழ்த்துவோமாக! என்பர்.

திருமாலே! உன்னுடைய பேரருள் எங்களுக்கு எப்பொழுதும் எந்நேரமும் கிடைக்கவேண்டும் ; நாங்கள் மனிதர்கள், தவறுசெய்பவர்கள். ஆனால் உன் கருணையால் எங்களைத் திருத்தி, பிரிவு எதுவும் வராமல், பலஆண்டுகள் எங்களைக் காப்பாயாக! உனக்குத் திருப்பல்லாண்டு கூறுகின்றோம்.

உன்னுடையதிருமேனி அழகெல்லாம் திரண்ட அழகுத் திருமேனி ; பேரொளி வீசும் திருமேனி ; எல்லாவகைச் செல்வங்களும் உன்னை அடையத் தவம் கிடக்கும் திருமேனி.

இதற்கெல்லாம், காரணம் அந்த மகாலெட்சுமிதானே! அந்தச் செல்வத்திருமகள் உன்னுடைய மார்பில் வலப்பக்கத்தே இருந்து அருள் செய்கின்றாள். அவளுக்குப் பல்லாண்டு கூறுகின்றோம்.

போரில் வெற்றியடையச் செய்யும் சக்கரத்திற்கும், எல்லா வகை ஒலிகளுக்கும் அடிப்படை ஒலியாய் அமைந்த அந்தப் பாஞ்ச சன்னியத்திற்கும் பல்லாண்டு கூறுகின்றோம்.

இவ்வாறு, ஆழ்வார் பல்லாண்டு கூறுவதின் மூலம், எல்லாவகை மந்திரங்களுக்கும் ஆதியாய் நிற்கும் நாராயணத் திருமந்திரத்திற்கும் மனத்தால் வழுத்தி, அதற்கும் மங்களாசாசனம் பாடுகின்றார் என்க!

உ

ஸ்ரீ

# அழகிய மணவாளன்

**எழிலுடைய அம்மனையீர்!**
**என்னரங்கத் தின்னமுதர்;**
**குழல்அழகர் ; வாயழகர்;**
**கண்ணழகர் ; கொப்பூழில்**
**எழு கமலப் பூவழகர் ;**
**எம்மனார் என்னுடைய**
**கழல் வளை யைத்தாமும்**
**கழல் வளையே ஆக்கினரே!**

- ஆண்டாள் ;

நாச்சியார் திருமொழி பா.எ.608

உலகம் முழுவதும் அழகு மயமாகவே காட்சியளிக்கின்றது. காணுகின்ற பொருள்கள், மனித இனம், உயிரினங்கள் எல்லாவற்றுள்ளும் ஒருவகை அழகு மறைந்திருப்பதைக் காணுகின்றோம். அழகு என்ற பண்பு நம்மை அறியாமலே நம்மை ஆட்கொள்கின்றது.

அதுபோன்று, திருவரங்கத்தே அழகிய மணவாளன் பள்ளிகொண்டிருக்கிறான். அப்பெருமாளின் திருஅழகிலே தன்னை இழந்தாள் ஆண்டாள். அவனுடைய திருமனியின் ஒவ்வொரு உறுப்பும் அவளை என்னவோ செய்கின்றது. காதல்வயப்பட்டாள். காதலினால் மெலிந்தாள்.

அழகை உடைய அன்னையீர்! திருவரங்கத்தே பள்ளிகொண்ட அழகிய மணவாளராகிய அரங்கநாதர் என்னவர்தான்! ; இனிமையின் உருவம் அவர் ; அமுதம் ஒத்த திருமேனியை உடைய அழகர் ; அழகான கூந்தலை உடையவர்; சிவந்த வாயழகர்; காண்பாரைத்தன்பால் இழுக்கும் கண்ணழகர் ; தாமரையின் மென்மையும், அழகும் கொண்ட உந்திச் சுழியோடுடைய திருவயிற்றை உடைய அழகர் ; இவ்வளவு அழகும் பெருமையுமுடைய இவர் இந்தச் செயலைச் செய்யலாமா! சொல்லுங்கள்! நான் கையில் கழல் அணிந்திருந்தேன் ; அது கழற்றவும் பின் சேர்க்கவும் இயல்புடைய ஒன்று. காதலால் அவர்பால் காதலுற்றேன் ; காதலால் மெலிவுற்றேன். அதற்காக, இயல்புடைய அணியை என் கையை விட்டே கழன்று ஓடுமாறு செய்வது அழகா! என்னே இவர்தம் கருணை! என அங்கலாய்க்கிறாள் ஆண்டாள்.

இப்பாடலில் அழகு என்ற பொருளே திருமாலாகவும், திருமாலே அழகு என்பதும் கண்டு உவந்தாள் ஆண்டாள். ஆக, அழகு திருமால், திருமாலே அழகு என்ற தத்துவம் இங்கு பேசப்படுகின்றது.

உ

ஸ்ரீ

# திருமகள் வாழ்த்து

அடர்கரு முகிலிற் செம்மை
　　அழகுறக் கலந்தா லன்ன,
படர்அறம் பூப்ப தேபோல்
　　பாம்பணை அப்பன் மார்பில்
இடர்கெட எழுந்த தாயை
　　ஈடிலாச் செல்வம் ஈந்து
சுடர்விடும் பவளத் தாளைத்
　　துயரறப் பரவு வோமே!

– ரெ.முத்துக்கணேசன்
'முத்துமாலை'

உலகினில் அழகுக்கென்று ஒரு தெய்வவடிவு உண்டென்றால் அது திருமகள் தானே! ; ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒருவடிவமாய்க் காட்சியளிக்கின்றாள்! அன்பும், அருளும் உடைய தெய்வம். ஏன் இவ்வளவு பேரழகினை எடுக்கிறாள் என்று சிந்தித்தால், திருமகள் தன் அழகினாலே ஆன்மாக்களின் குறைகளைப் போக்குகிறாள் ; அழகினாலே திருத்துகிறாள் : ஆன்மாக்களை முழுமனிதர்களாக, ஆற்றல் வாய்ந்தவர்களாக ஆக்குகிறாள் என்றே கூறலாம்.

அடர்ந்த கருமேகம் போன்று தோற்றம் உடையவர் திருமால் ; ஆனால் திருமகளோ பவளம் போன்று சிவப்புநிறம் உடையவள். இவர்கள் சேர்ந்திருக்கும் திருக்கோலம் கருப்பும் சிவப்பும் கலந்த திருக்கோலம் ; கண்களைக்கவரும் திருக்கோலம்.

பாம்புப் படுக்கையில் பள்ளிகொள்ளும் இறைவன் திருமார்பில் திருமகளாகிய இலக்குமி எழுந்தருளி இருக்கிறாள். இது எவ்வாறு இருக்கிறது என்றால், இவ்வுலகத்தைக் காக்க "தருமம்" பூத்து முன்னிற்பது போன்று இருக்கிறதாம் 'தருமம் தலைகாக்கும்' என்பது தானே முதுமொழி! இங்கு அன்னை தருமமாக காட்சி அளிக்கின்றாள்.

வாழ்க்கையில், மனிதன் தவறுசெய்கிறான். அவற்றைத் தன் கருணையினால் மன்னித்து, அவனுக்கு அருள்புரியுமாறு திருமாளிடம் வேண்டுவாளாம் அன்னை! ஆகையினால்தான் இந்த அன்புத்தாயைத் "தாயார்" என்ற சொல்லில் அழைக்கின்றார்கள் வைணவப் பெருமக்கள்.

திருமகளை உள்ளன்போடு துதிப்பவர்களுக்கு தாய் துன்பங்களைப் போக்குகிறாள். இன்பங்களைப் பெய்கிறாள்; எல்லாவகைச் செல்வங்களையும், அள்ளி அள்ளித் தந்து காக்கின்றாள். அவள்தம் பொற்பாதங்களைப் பரவிப் பணிவோமாக!

